**அம்பன்கங்ககோரலே பிரதேச சபை**
**மாதளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 12 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஜுன் 24 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பன்கங்ககோரலே பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மெடிஹக்க பற்செயல் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 39,188,670 ஆன தொகை மற்றும் அதன் 308 உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான ஜேசர்தோட்ட சனசமூக மண்டப கட்டிடத்தின் பெறுமதி மீளாய்வாண்டு இறுதியில் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அலுவலக உபகரண கணக்கு ரூபா 30,632 ஆன தொகை கூடுதலாக காட்டப்பட்டது.

(ஈ) அன்பளிப்பாக கிடைத்திருந்த குப்பை மாட்டுவண்டியின் பெறுமதி மற்றும் JB- 2773 டெக்டரின் டேலரின் பெறுமதியான ரூபா 125,000 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதி திகதியில் பெற வேண்டிய 7 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,374,426 ஆனதுடன், 3 வருட காலத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாத ரூபா 1,425,441 அம் மீதியினுள் உள்ளடங்கப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 8 கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,894,048 ஆனதுடன், 3 வருட காலத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாத ரூபா 1,748,297 அம் மீதியினுள் உள்ளடங்கப்பட்டிருந்தது.

(ii) உள்ளூராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய 7 வருடத்திற்கும் மேற்பட்ட காலத்திலிருந்து நிலவிய ரூபா 626,974 ஆன மீதியொன்று நிலவியது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக 7 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 8,146,624 ஆன மீதிகள் திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | 2015 மார்ச் 10 ஆம் திகதிய இலக்கம் 03/2014(i) கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் vi காண்டம் மற்றும் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 3/2/1/23 மற்றும் 2015 ஆகஸ்ட் 26 திகதிய கடிதம். | அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,000 தொகையை விஞ்சி செலவு செய்யப்பட்ட தொலைபேசி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 4,000 வரை பட்டியல் மீள் நிரப்பப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பட்டியல் மீள் நிரப்பப்படாமல் 2016 ஜனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 4000 ஆன கொடுப்பனவு சபை செயலாளரின் சம்பளத்துடன் செலுத்தப்பட்டதனால் 2016 ஆண்டினுள் ரூபா 24,000 தொகை ஆலோசனைகளுக்கு மாற்றமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 990,615 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 532,059 ஆனது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 458,556 ஆன வளர்ச்சியொன்று காண்பிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவில் ரூபா 458,556 வளர்ச்சிக்கு 5 வருமான விடயங்களில் ரூபா 961,819 இனால் வருமானம் அதிகரித்தல் மற்றும் 2 செலவின விடயங்களில் ரூபா 541,200 ஆல் செலவினம் குறைத்தல் தாக்கம் விளைவித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 குத்தகை வாடகை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் குத்தகைக்கு வழங்கியிருந்த கடையறைகளுக்காக ரூபா 23,430 ஆன மீதி அறவிடவேண்டியிருந்தது.

#### 2.3.2 ஏனைய வருமானம்

(அ) நீர்க் கட்டணம்

சபைக்கு சொந்தமான 7 நீர் உத்தேசத் திட்டங்களில் 2016 திசெம்பர் 31 இல் நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 338,704 ஆனதுடன், அதுனுள் 22 நீர் பாவனையாளர்களிடமிருந்து 2013 ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 31,475 மீதி ஆனது.

(ஆ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் ரூபா 58,549 ஆன நிலுவை மீதி இருந்தது.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 40,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 1,290,000 ஆன தொகை பெற வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேசத்தில் பொது வசதிகள் மேம்படுத்துவதற்கு தேவையான 6 கருத்திட்டங்கள் பல வருடங்களிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லாததுடன், 2016 அபிவிருத்தி திட்டத்தை அமுல்படுத்தப்பட வேண்டி என இனங்காணப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 19,500,000 ஆன 16 அபிவிருத்தி கருத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மெய்மையாய்வு குழுவினால் உறுதிப்படித்திக்கொள்ளாமல் மற்றும் உரிய அனுமதிபெறப்படாமல் ரூபா 144,000 ஆன இரண்டு கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

**(ஆ)** அங்கீகரிக்கப்பட்ட 9 பதவிகளுக்கான 16 வெற்றிடங்கள் நிலவியது.

**(இ)** 51 பொது கிணறுகளுக்கு மற்றும் 13 இடுகாடுகளுக்கான உரித்துரிமை மற்றும் 4 காணிகளுக்கும் 8 கட்டிடங்களுக்குமான நில அளவைத் திட்டங்கள் இல்லாததுடன், லோலுவல கிராம சபை அலுவலக காணி மற்றும் எஹெலகஸ்தென்ன சனசமூக மண்டபம் அமைந்துள்ள காணி வேலி எல்லைகள் இடப்பட்டு பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** பிரதேச சபையினால் நீண்ட காலமாக உபயோகித்துக்கொண்டிருக்கும் 4 வண்டிகளின் உரிமையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** 2009 மற்றும் 2013 ஆண்டுகளிலிருந்து நிலவிவரும் ரூபா 111,833 பெறுமதியான 11 வைப்பு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் காவலாளி பதவி நீண்ட காலமாக வெற்றிடமாக நிலவியதுடன் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மெடிஹக்க பற்செயல் கட்டிடத்தின் பாதுகாப்புக்காக நாட்சம்பள அடிப்படையில் காவலாளி ஒருவரை சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டினுள் ரூபா 283,018 தொகை சம்பளமாக செலுத்தியிருந்தது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மக்கள் சுகாதார பரிசோதகர் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தரின் விதந்துரைத்தல்கள் பெற்றுக்கொள்ளாமல் பாதுகாப்பற்ற நிலையிலான 20 வணிகங்களுக்காக வணிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) உத்தரவு இல்லாத நிர்மானப் பதிவேடு பிரகாரம் 2012 ஆண்டின் போது இனங்கண்டிருந்த உத்தரவு இல்லாத 5 நிர்மானங்கள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த 13 கட்டிடங்களிற்கான விண்ணப்பங்களின் 6 இற்கு அனுமதி வழங்கப்ட்டிருந்த போதிலும், இனங்க சான்றிதல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இழப்பு நட்ட பதிவேடு மற்றும் கணனியும் உதிரிபாகங்களுக்குமான பதிவேடு நடாத்திருக்கவில்லை.

**3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான 6 வண்டிகள் 1 வருடம் முதல் 8 வருடம் வரை காலம் விளைவற்றததாக நிலவியதுடன், 2 கட்டிடங்கள் பல வருடங்களிலிருந்து பயன்படுத்தாமல் விளைவற்றதாக நிலவியது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** சபையினால் 2014 நவம்பர் 12 ஆம் திகதி இலக்கம் 25/014 கொண்ட அரச நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முறனாக 3 பதவிகளுக்காக 4 நிரந்தர நியமனங்கள் வழங்கி பின்னர் இரத்துச்செய்யப்பட்ட காரணமாக அந்த உத்தியோகத்தர்களால் 2016 செப்தெம்பர் 25 திகதியில் சபைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குக்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 300,000 ஆன வழக்கு கட்டணம் உரிய ஆலோசனை பெற்றுக்கொள்ளாமை மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முறனாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டததனால் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பயனற்ற செலவாக இருந்தது.

**(ஆ)** இலக்கம் 252-6519 கொண்ட டபல் கெப் வண்டியின் உரிமை சுவீகரிக்கப்படாமையினால் 18 வருடங்களுக்கான நிலுவை வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தும் போது சேவை கட்டணம் தண்டப்பணமாக மேற்கொள்ள வேண்டியிருந்த ரூபா 47,970 ஆன மேலதிக செலவினம் சபை நிதியத்திற்கு இழப்பாக இருந்தது.

**3.6 ஒப்பந்தக் நிருவாகம்**

**கலுகங்கை அருகில் கினறொன்று நிர்மானிக்கப்பட்டு நீர் கருத்திட்டத்திற்கு நீர் வழங்குதல்**

பிரஜைகள் நீர் விநியோகம் மற்றும் சுகாதார கருத்திட்டத்தின் கீழ் ரூபா 1,685,451 செலவை மேற்கொள்ளப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த கிணறு மற்றும் பம்பி அறை வளவின் உரிமை பிரதேச சபை அல்லது பிரஜைகள் நீர் சங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லாததுடன், கருத்திட்டத்திற்கு மின்சாரம் வழங்கியிருக்காமை மற்றும் நீர் பம்பியை வழங்கி பொறுத்தியிறுக்காமை மீது நீர் விநியோக நடவடிக்கை 2017 மார்ச் 13 திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 கருத்திட்டங்கள் தாமதித்தல்**

பிரதேச சபை வழுவூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுத் தொகை ரூபா 1,850,000 ஆன 4 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதியின் 5(7) விதி பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடாத்திச்செல்லப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமை குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

**(அ)** 11 வருமான விடயங்களுக்காக ரூபா 170,000 ஆன எவ்வித மதிப்பிடப்பட்ட வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லாததுடன், 24 வருமான விடயங்களின் தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான வருமானங்களின் இடையில், விலகலில் 28 சதவீதம் முதல் 305 சதவீதம் இடையிலான வீச்சளவாக நிலவியது.

**(ஆ)** 15 செலவின விடயங்களுக்கான ரூபா 390,000 ஆல் எவ்வித செலவும் செய்யப்படாமல் முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 28 செலவின விடயங்கள் தொடர்பாக தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையில் விலகலில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சளவாக நிலவியது.

**(இ)** மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவு விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும், பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்.
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) பாதீடு கட்டுப்பாடு.